# 2. நற்றிணை

பாடலின் ஆசிரியர் : கபிலர்
திணை : குறிஞ்சி.
துறை : இது, பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது.

தலைவன் பிரியக்கருதிய தறிந்த தோழி தலைவியிடங் கூறலும், தலைவி அவரை இன்றியமையாத என்னை வருந்தும்படி விட்டுப் பிரிகின்ற அன்னதொரு குணக்குறைபாடு இலரெனத் தலைவனைப் புகழ்ந்து கூறாநிற்பது.

**நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்**
**என்றும் என்றோள் பிரிபறி யலரே**
**தாமரைத் தண்டா தூதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீரின் றமையா வுலகம் போலத்**
**தம்மின் றமையா நந்நயந் தருளி**
**நறுநுதல் பசத்த லஞ்சிச்**
**சிறுமை உறுபவோ செய்பறி யலரே.**

தலைவன் உன்னை விட்டு பிரிந்து போகப் போகிறான் என்று தலைவியிடம் தோழி சொல்கிறாள்.அவர்களுக்குள் இன்னும் திருமணம் ஆகவில்லை. காதல்தான். அவனுக்கு, அவள் மேல் உள்ள காதலை விட, அவளுக்கு, அவன் மேல் உள்ள காதல் அதிகம். அது மட்டும் அல்ல, அவன் தன்னை அளவு கடந்து நேசிக்கிறான் என்றும் அவள் நினைக்கிறாள். மேலும், அவனைப் பிரிந்து அவளால் இருக்க முடியாது என்பதையும் அவன் அறிவான் என்றும் நினைக்கிறாள்.

இவை எல்லாம் உண்மையா ? தெரியாது. அவன் தன்னை விட்டுப் பிரிந்து போகப் போகிறான் என்று சொன்னவுடன், தலைவி உருகுகிறாள். அப்படியெல்லாம் இருக்காது. ”அவன் எப்போதும் என் தோள்களை விட்டுப் பிரிய மாட்டான். இந்த உலகுக்கு நீர் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு அவன் எனக்கு முக்கியம் என்பதை அவன் அறிவான். அவனை விட்டுப் பிரிந்தால், நான் வாடிப் போய்விடுவேன் என்பது அவனுக்குத் தெரியும். எனவே அவன் என்னை விட்டுப் பிரிய மாட்டான்”

## பாடல்: 2

பாடலின் ஆசிரியர்: மாங்குடிக்கிழார்.
திணை : மருதம்.
துறை : இது, விருந்துவாயிலாகப்புக்க தலைவன் சொல்லியது.

பரத்தையிற் பிரிந்தவன் தலைவியின் ஊடலைத் தணிக்கப் பெறானாய் விருந்தொடு புகுதக்கண்டு அவள் தன் ஊடலையடக்கி விருந்தெதிர் கொண்டாளாக, அதனை நோக்கிய அத்தலைமகன் இவள் பரிகலந்திருத்தி அட்டிலிடத்தாளாயினள் இதற்குக் காரணம் இவ்விருந்தே யாதலின் இஃதெஞ்ஞான்றும் வந்துதவுவதாக, வந்தால் இவளின் முயக்கத்தைப் பெறுதற்குரிய இனிய முகத்தைப் பார்ப்போமென்று மகிழ்ந்து கூறாநிற்பது.

**தட மருப்பு எருமை மட நடைக் குழவி**
**தூண் தொறும் யாத்த காண்தகு நல் இல்,**
**கொடுங் குழை பெய்த செழுஞ் செய் பேதை**
**சிறு தாழ் செறித்த மெல் விரல் சேப்ப,**
**வாளை ஈர்ந் தடி வல்லிதின் வகைஇ,**
**புகை உண்டு அமர்த்த கண்ணள், தகை பெறப்**
**பிறை நுதல் பொறித்த சிறு நுண் பல் வியர்**
**அம் துகில் தலையில் துடையினள், நப் புலந்து,**
**அட்டிலோளே அம் மா அரிவை-**
**எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பாள் அன்று,**
**சிறு முள் எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகம் காண்கம்மே.**

வளைந்த கொம்பினையுடைய எருமையின் இளநடையையுடைய கன்றுகளைத் தூண்கள்தோறும் கட்டியிருக்கின்ற காட்சி மிகுதியால் யாவரும் காணத்தக்க நல்ல மனையின்கண் வளைந்த குண்டலத்தைக் காதிலணிந்த செழுவிய செய்ய பேதைமையையுடைய காதலி சிறிய மோதிரஞ் செறித்த மெல்லிய விரல் சிவக்கும்படியாக் வாழையிலையைக் கொய்துவந்து அடிக்காம்பு பருத்திருத்தலின் அதனை வகிர்ந்து பரிகலமமைத்து அடிசிலாக்குதலாலே புகைபடிந்து அமர்த்த கண்களையுடையளாய் அழகுபெறப் பிறை போன்ற நுதலினுண்டாகிய சிறிய நுணுகிய பலவாய வியர்வை நீரை அழகிய முன்றானையினுனியாலே துடைத்துக்கொண்டு நம்மீது புலவி மிக்கு அடிசிற்சாலையிடத்திராநின்றாள் இப்பொழுது விருந்தினராய் வருபவர் எம்முடன் வருவாராக! அங்ஙனம் வரின் இந்த அழகிய மாமைநிறத்தையுடைய அரிவை சினங்கொண்டு ஒருபொழுதும் கண் சிவப்பதில்லை, அன்றியும் குறுமுறுவல் கொண்ட முகத்தினளாய் இருப்பள் ஆதலின் நமது முயக்கத்துக்கு இன்றியமையாத இவளது சிறிய முட்போன்ற எயிறு சிறிது தோன்றுமாறு நகை கொண்ட முகத்தையாம் காண்பேமாகி யிராநிற்போம்

விருந்து வாயிலாகப்புக்க தலைவன் சொல்லியது. - மாங்குடி கிழார்.